**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.119/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW- 2/LW-2 | Village : மணலூர் |
| Name : மகாலெட்சுமி | Age :27 |
| Father's/Husband's Name : அருமைதுரை | Taluk : திருவிடைமருதூர் |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மணலூர் மாதாகோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தம் செய்து வருகிறேன். அசா1 எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது தெருவை சேர்ந்தவர்கள். ஆஜர் 2வது எதிரி சதீஷ் என்பவருக்கு எனது கணவருக்கும் இடையே எங்கள் வண்டியை 2வது எதிரி சதீஷ் மணல் அடிக்க எடுத்து சென்று திருப்பனந்தாள் போலிசாரிடம் மாட்டிக் கொண்டதால் எங்களுக்குள் முன்விரோம் இருந்து வந்தது. இதை மனதில் வைத்துக்கொண்டு கடந்த 28.03.2018ம் தேதி மதியம் 2

மணியளவில் கறி விருந்திற்காக நானும் எனது கணவரும் மெயின்ரோட்டில் 2 வது எதிரி சதீஷ் பர்னிச்சர் கடை எதிரே நடந்து சென்று கொண்டிருந்தபோது சதிஷ் பர்னிச்சர் கடையில் இருந்து எங்களை அழைத்தார். அங்கே எதிரிகள் மூவரும் இருந்தனர். அப்போது சதீஷ் என் கணவரை பார்த்து நீ எப்படி என்னை அசிங்கமாக சொல்லலாம் என்று குச்சிகாரி மகனே என்று அசிங்கமா திட்டி அவரது கடையில் உள்ள இரும்ப கம்பியை எடுத்து என் கணவரின் தலையில் அடித்தார். 1வது எதிரி அரசகுமார் என் பிரண்டை பார்த்து நீ எப்படி தப்பா சொன்னாய் என்று எனது கணவரின் வலது முன்னங்கையில் பாரையால் குத்திவிட்டார். 3 வது எதிரி பரசுராமன் எனது கணவரை பிடித்துக்கொண்டு நான் பிடித்து கொள்கிறேன் அடிங்கடா பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார். நான் சத்தம் போட்டவுடன் அக்கம் பக்கத்தினர் ஓடி வரவே ஆஜர் எதிரிகள் மூவரும் எனது கணவரை பார்த்து உன்னை கொல்லாமல் விட மாட்டோம் என்று மிரட்டினார்கள். என் கணவரை ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். அங்கு திருப்பனந்தாள் போலிசார் வந்து விசாரித்து எனது கணவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.119/2020 <br> Sessions : <br> Deposition of Witness for : PW- 1/LW-1 <br> Name : அருமைதுரை <br> Father's/Husband's Name : ராமசாமி <br> Nationality : Indian | Village:மணலூர் <br> Age :30 <br> Taluk : திருவிடைமருதூர் <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது மணலூர் மாதாகோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் மரம் வெட்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் 2 வது எதிரி சதீஷ் என்பவரிடம் நான் வண்டி ஓட்டி கொண்டிருந்தேன். அவரது வண்டியில் குளத்தில் மணல் ஏற்றியதால் திருப்பனந்தாள் போலிசார் பிடித்து கொண்டார்கள். இது சம்மந்தமாக எனக்கும் ஆஜர் 2 வது எதிரி சதீஷ்க்கும் முன் விரோதம் இருந்து வந்தது. இது சம்மந்தமாக கடந்த 28.03.2018 ம் தேதி மதியம் 2 மணியளவில் எனது உறவினர் செல்வம் என்பவர்

வீட்டின் கறி விருந்திற்காக நானும் எனது மனைவி மகாலெட்சுமியும் 2 வது எதிரி சதீஷ் பர்னிச்சர் கடை எதிரே நடந்து சென்று கொண்டிருந்தபோது 1 வது எதிரி அரசகுமார், சதீஷ் பர்னிச்சர் கடையில் இருந்து என்னை அழைத்தார். நான் சென்றேன். 1 வது எதிரி என்னை பார்த்து சதீசை பற்றி நீ எல்லோரிடம்மு கண்ணாபின்னா என்று சொல்லி அரசகுமார் என் சட்டையை பிடித்து இழுத்து குச்சிக்காரி மகனே என்று திட்டினார். சதீஷ் பர்னிச்சர் கடையில் இருந்து ஒரு இரும்பு கம்பியை எடுத்து வந்து எனது தலையில் அடித்துவிட்டார். அரசகுமார் பாரையை எடுத்து வந்து எனது வலது முன்னங்கையில் குத்தினார். 3 வது எதிரி பரசுராமன் என்னை பிடித்துக்கொண்டு நான் பிடித்து கொள்கிறேன் அடித்து கை கால்களை முறித்துவிடுங்கள் என்று சொன்னார். இதற்கு பிறகு எதிரிகள் மூவரும் எங்களிடம் வைத்துக் கொண்டால் உன்னை உயிரோடு விட மாட்டோம் என்று மிரட்டினார்கள். என் மனைவி கத்தியவுடன் பக்கத்தில் உள்ள கோவிந்தராஜ், ரமேஷ், மதிவாணன், பூசாரி மனைவி மஞ்சுளா ஆகியோர் வந்து விலக்கிவிட்டார்கள். நான் ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு திருப்பனந்தாள் போலிசார் வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**